# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

* **பத்தாம் வகுப்பு** பதிவு எண் :

## தமிழ்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.** 8 x 1 = 8

1. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது

   அ) திருக்குறள் ஆ) புறநானூறு

   இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

2. மேன்மை தரும் அறம் என்பது

   அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது

   ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

   இ) புகழ் கருதி அறம் செய்வது

   ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

3. வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் - இவ்வடி குறிப்பிடுவது

   அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை

   இ) இடையறாத அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

4. 'அடிகள் நீரே அருளுக' எனக் கூறியவர்

   அ) சீத்தலைச் சாத்தனார் ஆ) கம்பர்

   இ) இளங்கோவடிகள் ஈ) குமரகுருபரர்

5. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்

   அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்

   இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

6. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்

   அ) அகவற்பா ஆ) வெண்பா

   இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

7. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க.

   அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு

   இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

8. Irrigation - இதன் கலைச்சொல்

   அ) பாசனம் ஆ) காப்புரிமை

   இ) நிலப்பகுதி ஈ) ஆவணம்

**II. எவையேனும் ஐந்தினுக்கு விடையளி.** 5 x 2 = 10

9. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
10. காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?
11. குறிப்பு வரைக : அவையம்
12. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்கு சான்று தருக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



13. தொகைச்சொல்லைப் பிரித்து எழுதி தமிழ் எண்ணுரு தருக.

அ) முத்தமிழ்

ஆ) ஐந்திணை

14. பாக்களின் வகைகள் யாவை?

15. பகுபத உறுப்பிலக்கணம் தருக : மயங்கிய

**III. எவையேனும் மூன்றினுக்கு விடையளி.** 3 x 3 = 9

16. தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

17. சங்க இலக்கியத்தில் காட்டும் அறங்கள் இரண்டை விளக்குக.

18. முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவி பாடுகிறார்?

19. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். - அலகிட்டு வாய்பாடு தருக.

20. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் எழுதுக.

**IV. எவையேனும் மூன்றினுக்கு விடையளி.** 3 x 5 = 15

21. அ) இரண்டாம் இராசராச சோழனது மெய்கீர்த்தியில் கூறப்படும் பெருமைகள் யாவை?

*(அல்லது)*

ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

22. அ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் என்ற உங்களது கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

*(அல்லது)*

ஆ) பழுதடைந்த உங்கள் தெரு மின்விளக்குகளை சரி செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

23. அ) மாணவ நிலையில் பின்பற்ற வேண்டிய அறங்களும், அதனால் ஏற்படும் நன்மைகளை பட்டியலிடுக.

*(அல்லது)*

ஆ) கல்வெட்டுகளை பராமரிக்க பாதுகாக்க நாம் செய்ய வேண்டியதை பட்டியலிடுக.

**V. விரிவான விடையளி.** 1 x 8 = 8

24. அ) 'மங்கையராய் பிறப்பதற்கே' என்ற தலைப்பில் வரும் சாதனைப் பெண்கள் குறித்து விரிவாக எழுதுக.

*(அல்லது)*

ஆ) இராமானுசர் நாடகத்தை கதை வடிவில் சுவை குன்றாமல் எழுதுக.

******

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com